ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2470/12 - 2026 ජනවාරි මස 05 වැනි සඳුදා - 2026.01.05

*2470/12 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் சட்டம்**

ச.வ.பீ. 1/2015

1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பந்தி (இ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் 40 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், பேரவையின் விதப்புரையின் மேல், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**கே. டீ. லால்காந்த,**
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சர்.

கொழும்பு,
2025, திசெம்பர் 19.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் (அபகீர்த்தியான நடத்தை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

**பாகம் I**

**அபகீர்த்தியான நடத்தை**

2. இவ்வொழுங்கு விதிகளுக்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயல் அல்லது செய்யாமை இவ்வொழுங்கு விதிகளின் நோக்கத்துக்காக அபகீர்த்தியான நடத்தையாகவிருத்தல் வேண்டும்.

**பாகம் II**

**விசாரணைக் குழாங்களை நியமிப்பதற்கான முறையும் நடவடிக்கைமுறையும்**

3. பேரவையானது, அதன் சொந்தப் பிரேரணையின் மீது அல்லது எவரேனுமாளினால் அதற்குச் செய்யப்பட்டவொரு முறைப்பாட்டின் மேல், எவரேனும் விலங்கு மருத்துவர் அல்லது மருத்துவத் தொழிலர் தொடர்பான அபகீர்த்தியான நடத்தை பற்றிய ஒரு முறைப்பாட்டை விசாரணை செய்யலாம்.

4. மூன்றாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட முறைப்பாடானது, இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் பொருள் சார்ந்த ரீதியில் இருத்தல் வேண்டுமென்பதுடன் பேரவைக்குச் சமர்ப்பிப்படுதலும் வேண்டும்.

5. (1) பேரவையானது, 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் முறைப்பாடொன்றைப் பெற்றதன் மேல் -

(அ) அத்தகைய முறைப்பாட்டை அடுத்து வருகின்ற பேரவைக் கூட்டத்தில் அல்லது அந்நோக்கத்துக்காகக் கூட்டப்பட்ட ஒரு விசேட பேரவைக் கூட்டத்தில் பட்டியலிடுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அதன் சொந்தத் தற்றுணிபின் பேரில், ஒன்றில் மூன்று அல்லது ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட விசாரணையாளர்கள் குழாமொன்றை நியமித்தல் வேண்டும்.

5. (2) விசாரணையாளர் குழாமொன்றை நியமிக்க பேரவை தீர்மானிப்பின்,

(2) (அ) மூன்று உறுப்பினர்களைக் கொண்ட விசாரணைக் குழாமொன்றை நியமிப்பதற்குப் பேரவை முடிவுசெய்யுமிடத்து, ஆகக் குறைந்தது ஒரு உறுப்பினரொருவரேனும் பேரவையின் உறுப்பினராக இருந்தல் வேண்டும்;

(ஆ) ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட விசாரணைக் குழாமொன்றை நியமிப்பதற்குப் பேரவை முடிபுசெய்யுமிடத்து, ஆகக் குறைந்தது இரண்டு உறுப்பினர்களேனும் பேரவையின் உறுப்பினர்களாக இருந்தல் வேண்டும்,

அத்துடன் ஏனைய உறுப்பினர்கள், ஒரு விலங்கு மருத்துவராக அல்லது விலங்கு மருத்துவத் தொழிலர்களாக குறைந்த பட்சம் பத்தாண்டுக்கால அனுபவத்துடனான விலங்கு மருத்துவர்களாக அல்லது விலங்கு மருத்துவத் தொழிலர்களாக இருத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், பேரவை தோதானதெனக் கருதுமிடத்து, அத்தகைய விலங்கு மருத்துவரின் அல்லது விலங்கு மருத்துவத் தொழிலரின் இடத்தில், பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் குறிப்பிட்ட கற்கையில் அத்தகைய அனுபவத்துடனான அல்லது அறிவுடனான வேறெவரேனுமாளை அது விசாரணைக் குழாத்துக்கு நியமிக்கலாம்.

**பாகம் III**

**பேரவையின் விசாரணைகளும் முடிவுகளும்**

6. ஐந்தாம் ஒழுங்குவிதியின் கீழ் எல்லா நியமிக்கப்பட்ட ஒவ்வொரு விசாரணைக் குழாமும்-

(அ) (இதனகத்துப்பின்னர் விலங்கு மருத்துவர் அல்லது மருத்துவத் தொழிலர் எனக் குறிப்பீடு செய்யப்படும்) குற்றம் சுமத்தப்பட்ட அபகீர்த்தியான நடத்தை புரியப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட விலங்கு மருத்துவரிடமிருந்து அல்லது விலங்கு மருத்துவத் தொழிலரிடமிருந்து அல்லது விசாரணைக்கு இயைபான வேறெவரேனும் ஆளிடமிருந்து தகவல்களை அல்லது ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் அல்லது கோருதல் வேண்டும்;

(ஆ) அதன்முன்னர் தோன்றி மற்றும் 9 ஆம் ஒழுங்குவிதியின் கீழான ஏதேனும் நடவடிக்கை ஏன் எடுக்கப்படலாகாதெனக் காரணங்காட்டும்படி விலங்கு மருத்துவருக்கு அல்லது மருத்துவத் தொழிலருக்கு அறிவித்தல் வேண்டும்;

(இ) நியாயமான அறிவித்தலின் பின் உகந்த நேரங்களில், பேரவையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, அத்தகைய அபகீர்த்தியான நடத்தை இடம்பெற்றுள்ள அல்லது இடம்பெற்றுள்ளதாக நம்பப்படும் எவையேனும் இடங்களில் சோதனைகளை நடாத்தலாம்.

7. (1) ஐந்தாம் ஒழுங்குவிதியின்கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு விசாரணைக் குழாமும், அந்தந்த விசாரணைக் குழாத்தினால் எழுத்தில் சமர்ப்பிக்கப்பட்ட செல்லுபடியான காரணங்களின் மீது பேரவையினால் நீடிப்பொன்று வழங்கப்பட்டாலொழிய, அதன் நியமனத் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அதன் விசாரணைகள் தொடர்பான எல்லாக் கேட்புகளையும் சோதனைகளையும் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு விசாரணைக் குழாத்தினதும் முடிவுகள் பெரும்பான்மை வாக்கொன்றின்மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு விசாரணைக் குழாத்தினாலும் புறக்குறிப்பிடப்பட்ட இறுதி அறிக்கையானது, கேட்புகளும் சோதனைகளும் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஒரு மாதத்தினுள் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

8. ஒவ்வொரு விசாரணைக் குழாமும், அதன் அறிக்கையில், பின்வருவனபற்றி ஒரு விதப்புரையைச் செய்தல் வேண்டும்:-

(அ) அபகீர்த்தியான நடத்தைக்காக விலங்கு மருத்துவர் அல்லது மருத்துவத் தொழிலர் குற்றவாளியா அல்லரா என்பது;

(ஆ) விலங்கு மருத்துவர் அல்லது மருத்துவத் தொழிலர் குற்றவாளியாகக் காணப்படின், விதிக்கப்பட வேண்டிய தண்டம்;

(இ) அத்தகைய அபகீர்த்தியான நடத்தை மீண்டும் நிகழ்வதனைத் தடுப்பதற்கான எவையேனும் வழிமுறைகள்.

9. (1) பேரவையானது, சட்டத்தின் 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க நடாத்தப்பட்ட பேரவையின் கூட்டமொன்றிலும், இயைபான விசாரணைக் குழாத்தின் விதப்புரையைக் கவனத்துட் கொண்ட பின்னரும் அபகீர்த்தியான நடத்தைக்காக விலங்கு மருத்துவர் அல்லது மருத்துவத் தொழிலர் குற்றவாளியாகவுள்ளாரெனப் பேரவை தீர்மானிக்குமிடத்து -

(அ) பேரவையின் முன்னர் தோன்றும்படி அத்தகைய விலங்கு மருத்துவருக்கு அல்லது மருத்துவத் தொழிலருக்குக் கட்டளையிடலாமென்பதுடன் ஒரு வாய்மொழிமூலமான கண்டனத்தையும் வழங்கலாம்;

(ஆ) எழுத்தில் கண்டனம் தெரிவிக்கலாம்; அல்லது

(இ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை விதிக்கலாம்:-

(i) பேரவையினால் தீர்மானிக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு விலங்கு மருத்துவரின் அல்லது மருத்துவத் தொழிலரின் பதிவை இடைநிறுத்துதல்; அல்லது

(ii) அத்தகைய விலங்கு மருத்துவரின் அல்லது மருத்துவத் தொழிலரின் பெயரை இடாப்பிலிருந்து அகற்றுதல்.

(2) பேரவையானது, உப ஒழுங்குவிதி (1) இன்கீழ் ஏதேனும் நடவடிக்கையை எடுக்குமுன்னர், அத்தகைய அபகீர்த்தியான நடத்தையின் தன்மையையும் பாரதூரமான தன்மையையும் கவனத்தில்கொள்ளுதல் வேண்டும்.

10. இவ்வொழுங்குவிதியின் கீழான விசாரணைகளை நடாத்துவதில் ஏற்பட்ட எல்லாச் செலவுகளையும் பேரவை பொறுத்தல் வேண்டும்:

ஆயின், பேரவையானது நியாயமானதென்றும் அவசியமானதென்றும் கருதினால், 9 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் விலங்கு மருத்துவர் அல்லது மருத்துவத் தொழிலர் என்போருக்கு எதிராக எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கைக்கு மேலதிகமாக, குற்றவாளியாகக் காணப்படின், செலவுத்தொகையின் முழுத்தொகையை அல்லது செலவுத்தொகையின் பாகத்தை அவரிடமிருந்து அது விதிப்பனவு செய்ய முடியும்.

11. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக-

"சட்டம்" என்பது, 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் சட்டம் என பொருள்படும்;

"பேரவை" என்பது, 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் சட்டத்தினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"இடாப்பு" என்பது, 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பேணப்பட்ட இடாப்பு என்று பொருளாகும்;

"விலங்கு மருத்துவர்" என்பது, 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் சட்டத்தின்கீழ் ஒரு விலங்கு மருத்துவராகப் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் ஆள் என்று பொருளாகும்;

"விலங்கு மருத்துவத் தொழிலர்" என்பது, 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் தொழிலர்கள் சட்டத்தின் கீழ் ஒரு விலங்கு மருத்துவத் தொழிலராகப் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் ஆள் என்று பொருளாகும்.

## முதலாம் அட்டவணை

**(ஒழுங்குவிதி 2)**

**விலங்கு மருத்துவரின் அல்லது மருத்துவத் தொழிலரின் அபகீர்த்தியான நடத்தை**

(அ) குறைநிலைத் திறன்களைப் பிரயோகித்தல் மற்றும் தொழில்புரிகையில் குறைநிலைக் கவனிப்பை வழங்குதல்;

(ஆ) விலங்கு மருத்துவர் அல்லது மருத்துவத் தொழிலர் ஒருவராக அவரது அந்தஸ்துக்குத் தகாதமுறையில் நடந்து கொள்ளுதல் ;

(இ) விலங்கு மருத்துவர்கள் அல்லது மருத்துவத் தொழிலர்கள் என்ற உயர் தொழிலுக்கு, அல்லது பேரவையின் நற்பெயருக்கு நயக்கேடு விளைவித்தல் அல்லது நயக்கேடு விளைவிக்க எத்தனித்தல்;

(ஈ) வேறெவரேனும் விலங்கு மருத்துவரின் அல்லது மருத்துவத் தொழிலரின் உயர்தொழில்சார் நற்பெயருக்கு அல்லது திறனுக்கு நயக்கேடு விளைவித்தல் அல்லது நயக்கேடு விளைவிக்க எத்தனித்தல்;

(உ) பூரணமற்ற, முறையீனமான அல்லது பிழையான தொழினுட்ப அறிவுறுத்தலை அல்லது தகவலை வழங்குதல்;

(ஊ) பேரவையின் அபிப்பிராயத்தில், ஒரு விலங்குக்கு நிவாரணம் வழங்குவதில் அவசியமற்ற வேதனையை அல்லது தாமதத்தை விளைவிக்கக்கூடிய ஏதேனும் செயல் அல்லது செய்யாமை;

(எ) சட்டத்தின் அல்லது இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு முரணான ஏதேனும் நடவடிக்கைமுறைகளை அல்லது செயல்முறைகளைப் புரிவதற்கு வேறெவரேனுமாளை அனுமதித்தல் அல்லது அவருக்கு அனுமதியளித்தல்; அத்துடன்

(ஏ) அவரது உயர்தொழில்சார் பணியைப் புரிகையில் பாரிய அசட்டையை வெளிக்காட்டுதல்.

**இரண்டாம் அட்டவணை**

(ஒழுங்குவிதி 4)

**விலங்கு மருத்துவர்கள் அல்லது தொழிலர்களின் அபகீர்த்தியான நடத்தை தொடர்பான முறைப்பாடு**

1. முறைப்பாட்டாளர் பற்றிய பொதுவான தகவல்கள்

| | | |
|---|---|---|
| அ. | முழுப்பெயர்/ முதலெழுத்துக்களுடனான பெயர் | |
| ஆ. | முகவரி | |
| இ. | தொலைபேசி இல. | |
| ஈ. | மின்னஞ்சல் முகவரி | |

2. எவருக்கெதிராக

| | | |
|---|---|---|
| அ. | முழுப்பெயர்/ முதலெழுத்துக்களுடனான பெயர் | |
| ஆ. | முகவரி | |

3. முறைப்பாடு

| | | |
|---|---|---|
| அ. | சம்பவத்தின் / சம்பவங்களின் திகதி /திகதிகள் | |
| ஆ. | சுருக்கமாக முறைப்பாடு அவசியமாயின், ஓர் இணைப்பாக வழங்கப்பட முடியும்) | |
| இ. | சான்று ஏதேனுமிருப்பின் (இணைப்பாக வழங்கப்பட முடியும்) | |
| ஈ. | வேறு சாட்சிகள் எவரேனுமிருப்பின் பெயர் / பெயர்கள் முகவரி / முகவரிகள் | |

..........................................................
முறைப்பாட்டாளரின் கையொப்பம்

.........................................................
திகதி

EOG 01 - 0037

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.